1997 மார்ச் 24]

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயத்திலே உள்ள ஆண்டவனுடைய தலையைச் சுற்றியே ஒளி வட்டம் இருக்கிற காரணத்தால் இந்த ஒளி தேவையில்லை என்று நான் கருதுகிறேன். (சிரிப்பு)

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவடைந்த பல்வேறு பிரிவினர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்கள்—நலிவடைந்த, வருவாய் குன்றிய கோயில்களுக்கு தற்போது மின் கட்டணம் 'கமர்ஷியல் டேரிப்' அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது. அதையாவது மாற்றி, டொமஸ்டிக் சர்வீஸ்களுக்கு வசூலிக்கிற அளவு, சிங்கிள் டாரிப்-ஆக வசூலிக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களைப் பொறுத்தவரையில், எல்லா ஆலயங்களுக்கும் கமர்சியல் டாரிப் வசூலிப்பது இல்லை, ஆலயங்களுக்கு, டாரிப்-7-ன் கீழ் மின்சாரக் கட்டணத்தை வசூல் செய்து வருகிறோம். ஆனால், ஆலயங்களைச் சுற்றிக் கடைகள் கட்டியிருப்பார்களேயானால் அந்தக் கடைகளுக்குப் டாரிப்-9-ன் கீழ் மின் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. எனவே, ஆலயங்களைப் பொறுத்தவரையில், விளக்குகள் போட்டு அங்கே மின்சாரத்தைப் பயன்படுத்தினால் டாரிப் 7-ன் கீழ் தான் மின் கட்டணத்தை வசூல் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 304, திரு. சி.டி. தண்டபாணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

304—

தனியார் துறையில் மின் நிலையம் துவங்குதல்

***4080—திரு. சி.டி. தண்டபாணி :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் தனியார் துறையில் மின் நிலையம் துவங்க அனுமதி கோரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு அனுமதி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தனியார் துறையில் பலதரப்பட்ட எரிபொருளைக் கொண்டு குறுகிய காலத்தில் மின்சாரம் தயாரிப்பதற்காக ஒரு அனல் மின் நிலையத்தை கோயம்புத்தூரில் சிறுமுகை என்ற இடத்தில் நிறுவுவதற்கு தொழில் வளர்ச்சிக் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிடி தண்டபாணி, இருக்கையில் இல்லை. திரு. எஸ்.எஸ். பொன்முடி.

திரு. எஸ்.எஸ். பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் பல்லடம், போத்தனூர் ஆகிய பகுதிகளில் தனியார்கள் காற்றாலைகள் வைத்து மின்சாரம் தயாரித்து வந்தனர். தற்போது தடைப்பட்டிருக்கிறது. அதற்கான காரணம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் ஏராளமாக காற்றாலைகள் மூலம் மின்சாரத்தைத் தயார் செய்து, அதை மின்சார வாரியத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு எந்தவிதமான தடையும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 305, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

305—

புன்செய் நிலங்களைத் தரிசாக மாற்றி பட்டா வழங்குதல்

***4330—திரு. எம். ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—